ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 27 வெள்ளிக்கிழமை (10 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 75

முகூர்த்த பட்டு புடவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

★ வடக்கு - கிழக்கில் புனரமைப்பு ★ பூநகரி முகாமை அகற்ற முடியாது ★ அரசமைப்புத் திருத்தத்தின் பின்னர் தேர்தல்

# இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசின் திட்டம்

# விரைவில் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப்படும்

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 10

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் அனேகமாகத் தயாரித்துவிட்டது. அத்திட்டம் விரைவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அரசியல் கட்சியினருக்கும் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களுடன் கலந்துரையாடப்படும்.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

யாழ்ப்பாணத்தைப் புனரமைக்கும் வேலைகள் இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படும் —

பூநகரி இராணுவ முகாமை அகற்றுமாறு விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். ஆனால் அவ்வாறு செய்ய முடியாது —

அரசமைப்பு மாற்றப்பட்டதும் நாட்டில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்படும் — என்று ஜனாதிபதி அறிவித்தார்.

இலங்கையில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களின் சங்கம் நேற்று ஜனாதிபதிக்கு மதிய விருந்தளித்தது.

அங்கு உரையாற்றுகையிலேயே சந்திரிகா மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

அவரது உரையின் முக்கிய பகுதிகளின் தொகுப்பு வருமாறு:—

"இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருகிறது. அந்தத் திட்டம் இப்போது பெரும்பாலும் வகுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அந்த ஆலோசனையை விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய அரசியல் கட்சியினருக்கும் விரைவில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம்.

அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களுடன் அதுகுறித்து அரசாங்கம் விரிவாகக் கலந்துரையாடும்.

அரசின் திட்டம் சம்பந்தமாக மேலதிக விவரங்களைத் தரத் தயங்கிய ஜனாதிபதி சந்திரிகா, தாம் அதிகாரங்களைப் பன்முகப்படுத்துவதற்குப் பூரணமாக ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

அரசியற் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசு விரும்பியபோதும், தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்குத் திகதியைக் குறிப்பிட்டு அறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "சீ - டான்ஸர்" கப்பலில் தபால் அனுப்ப ஏற்பாடு

### செஞ்சிலுவைக் குழு சம்மதம்

யாழ்ப்பாணம், பெப். 10

பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையே வாரத்தில் இரு தினங்கள் சேவையில் ஈடுபடவுள்ள "சீ—டான்ஸர்" கப்பலில் வெளியிடங்களுக்கான தபால் பொதிகளை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து தபால் பொதிகளை அந்தக் கப்பலில் திருமலைக்கு எடுத்துச் செல்ல செஞ்சிலுவைச் சங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## மயானத்தில் இருந்து 8 கைக்குண்டுகள் மீட்பு!

### நீர்கொழும்பில் சம்பவம்

கொழும்பு, பெப். 10

நீர்கொழும்பு, பிட்டிபன மயானத்தில் இருந்து மூன்று ஜே. ஆர். ரக கைக்குண்டுகளும், ஐந்து உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

வெளிப்பகுதி துருப்பிடித்தும், உதிரிப் பாகங்கள் உடைந்து செயலற்றும் காணப்பட்ட இக் குண்டுகள் பல வருடங்களுக்கு முன்னர் ஜே. வி. பி கிளர்ச்சிக் காலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றைக் கண்டு பிடித்த நீர்கொழும்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் அவற்றில் ஒரு குண்டை வெடிக்கச் செய்தார் ஏனைய குண்டுகள் கடலில் வீசப்பட்டன. (ஐ-5)

## ஜனாதிபதி சந்திரிகா இந்தியா செல்கிறார்



கொழும்பு, பெப். 10

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அடுத்தமாதம் இந்தியா செல்லவுள்ளார்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இது பற்றி நேற்று தெரிவித்தது.

ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் இதுவே சந்திரிகா குமாரதுங்காவின் முதல் வெளிநாட்டுப் பயணமாகும். [இ-4]

## இந்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்டது

### சிதம்பரத்துக்கும் பதவி

புதுடில்லி, பெப். 10

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமது அமைச்சரவையை விரிவுபடுத்தி உள்ளார்.

நேற்று மாலை 6 புதிய அமைச்சர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்; இருவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அஜித் சிங், பூட்டா சிங், மாதவராவ் சிந்தியா ஆகியோர் புதிய அமைச்சர்கள் ஆவர்.

வேங்கடஸ்வாமி, பி. ஏ. சர்மா ஆகியோர் அமைச்சர் மட்டத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

பி. சிதம்பரம் சுயேச்சையான பொறுப்புள்ள அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முத்தான் சிங், திருமதி ஊர்மிளா ராஜ்ய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. நரசிம்மராவின் முக்கிய அரசியல் எதிராளியான அர்ஜுன் சிங் ராஜினாமாச் செய்ததை அடுத்து தமது அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கவே பிரதமர் இந்த மாற்றத்தைச் செய்துள்ளார் என்று அவதானிகள் கருதுகின்றனர். [அ]

## கண்காணிப்புக் குழுவுக்கு மேலும் இரு வெளிநாட்டுப் பிரதிநிதிகள்

கொழும்பு, பெப். 10

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பைக் கண்காணிக்க உள்ள குழுக்களில் அங்கம் வகிப்பதற்காக, மேலும் இரண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அழைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கனடா, நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் ஏதாவது இரண்டில் இருந்தே புதியவர்களை அழைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக "த ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் ஆறு கண்காணிப்புக் குழுக்களை நியமிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது எனினும் அரசு நான்கு குழுக்களையே நியமிக்க நடவடிக்கை எடுத்திருந்தது.

இவற்றுக்குத் தலைமை வகிப்பதற்கென கனடா, நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து நான்கு பேரே இங்கு வந்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு முன் ஆஜராக உத்தரவு

கொழும்பு, பெப். 10

இந்தியாவின் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன், முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோரை ஜெயின் ஆணைக்குழுவின் முன் ஆஜராகுப்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணிய சுவாமியை அடுத்த மாதம் 7 ஆம் திகதியும் தேர்தல் ஆணையாளரை அடுத்த மாதம் 8 ஆம் திகதியும் ஜெயின் ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு ஆணைக்குழு நீதிமன்ற ஆணையை அனுப்பி வைத்துள்ளது.

இவ் ஆணைக்குழு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு பற்றி விசாரணை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புலிகள் சந்தேக நபர்களை யாழ். செல்ல அனுமதிக்குக

### மனித உரிமைக் கமிஷன் கோரிக்கை

கொழும்பு, பெப். 10

வேலூரில் கடும் பாதுகாப்புடன் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள 300 விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்துக்கு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

இப்படி இந்திய தேசிய மனித உரிமை கமிசன் தலைவர் நீதியரசர் ரங்கநாதன் மிஸ்ரா கேட்டுள்ளார்.

1951 ஆம் ஆண்டு ஐ. நா மாநாட்டின் தீர்மானத்தின் பிரகாரம் அகதிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ.3)

## புஸ்வாண பட்ஜெட் என்கிறார் றொனி

கொழும்பு, பெப். 10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பட்ஜெட் இலங்கையில் இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டுகளின் பொருளாதாரத் திட்டம் எதுவும் அற்ற புஷ்வாண பட்ஜெட் ஆகும்.

முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் புதிய பட்ஜெட் பற்றி பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகள் எதுவும் பட்ஜெட்டில் பிரதிபலிக்கவில்லை எனவும் அவர் கூறினார். [இ-க-6]

## கலைப்பீட மாணவர்கள் அனைவருமே நேற்று பகிஷ்கரிப்பில் இறங்கினர்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்கள் அனைவரும் நேற்றுமுதல் விரிவுரைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

மாட்டு வண்டி ஒன்றில் பல்கலைக்கழகத்துக்கு வந்த புதிய மாணவர்களின் வண்டி எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சிரேஷ்ட மாணவரை மீள அனுமதிக்குமாறு கோரி சென்ற செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆரம்பத்தில் கலைப்பீட 3 ஆம் வருட மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

நேற்று முதல் கலைப்பீட மாணவர்கள் அனைவருமே பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று காலை கூடிய கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், இடைநிறுத்தப்பட்ட மாணவர் மீதான விசாரணையை உடனடியாக மேற்கொண்டு அவரை விரிவுரைகளில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கோரினர். இல்லையேல் போராட்டத்தை தொடர்வதெனவும் தீர்மானித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கிடைக்க வில்லை போல

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரலி



## தமிழீழ தொழில் வங்கி 25-ம் திகதிமுதல் இயங்கும்

யாழ்ப்பாணம், பெப். 10

தமிழீழத்தினுள் கல்வி பயின்று தொழில் இன்றி இருப்பவர்களை பதிவு செய்து தமிழீழத்தில் உள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தகுதியின் அடிப்படையில் நிரப்புவதற்கு தொழில் வங்கி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொழில் வங்கி எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் இயங்கவுள்ளது.

இவ் வங்கி முறைசார் வேலையற்றோரை தகுதியின் அடிப்படையில் நிரல்படுத்தி — ஒழுங்கு படுத்தி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள பல சிரமங்களிலிருந்து வேலையற்றோரை பாதுகாப்பதும் அநீதிகளைக் குறைப்பதும் இதன் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டது.

தொழில் வங்கியில் பதிவு செய்பவர்களுக்கு, அதற்கான அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும்.

வருங்காலத்தில் இவ் அத்தாட்சிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

அரச திணைக்கள, கூட்டுத்தாபன, கூட்டுறவு நிறுவனங்களின் நேர்முகப் பரீட்சையின் போது "தொழில் வங்கி பதிவு

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்கு, கோவா, பீற்றூட் பயிர்ச் செய்கை நோயால் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10 கடந்த வாரம் பெய்த மழையினைத் தொடர்ந்து மேட்டு நிலப் பயிரினங்கள் புதியரகப் பயிர்ப்பீடையினால் பாதிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக உருளைக்கிழங்கு, கோவா, பீற்றூட் புகையிலை போன்ற பயிரினங்களே இந்நோய்த் தாக்கத்துக்குட்பட்டுள்ளன.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, வலைறு, உரும்பிராய், ஈவினைப்ப குதிகளில் இந்நோயின் தாக்கம் காணப்படுகின்றது. குறுகிய நாட்களுக்குள் ஏற்பட்ட இந்நோயினால் இம்முறை விவசாய அறுவடையில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

நோய்த்தாக்கத்துக் குட்பட்ட பயிர்களின் இலைகள் ஆரம்பத்தில் புழு மேய்ச்சலுக்குட்பட்டவை போன்று காணப்பட்டு பின் இரண்டு மூன்று நாட்களில் முழுத் தாவரமுமே கருகிவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உருளைக்கிழங்குப் பயிர்கள் விரைவில் முதிர்வடைந்தவை போலக் காணப்பட்டாலும், அறுவடை செய்கின்ற போது முற்றாத சிறியகிழங்குகளே கிடைக்கின்றன.

இதேபோன்று கோவாப் பயிர் இலைகளும் கருகி உதிர்ந்து காணப்படுகின்றன. பீற்றூட் பயிரின் இலைகளை ஒருவகைப் புள்ளி நோய் தாக்கியுள்ளது. புகையிலைப் பயிர்கள் குருமன் தாக்கத்துக்குட்பட்டவை போன்று காணப்படுகின்றன.

பல தடவைகள் மருந்துகள் விசிறப்பட்ட போதும் பயிரழிவைத் தடுக்க முடியவில்லை என்றும் தமது விவசாய அனுபவத்தில் இவ்வகையான நோய் ஏற்படுவது இதுவே முதல் தடவை என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்,

(ஐ-15-14-17)

## 800 ஆண்டுகால சிறுமியின் சடலம் கண்டு பிடிப்பு

அலாஸ்கா, பெப். 10

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் ஒரு மலை வெடிப்பில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுமி ஒருத்தியின் சடலம் சுமார் 800 ஆண்டு கால பழைமையானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இச்சிறுமி ஏறக்குறைய 1200 ஆம் ஆண்டில் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மேலும், சடல பரிசோதனையின் படி இச்சிறுமி 4 முதல் 8 வயது வரையானவர் என்றும் —

அவர் பட்டினியால் ஏற்பட்ட ஈரல் பாதிப்பினால் இறந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 10 யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் சிநேகிதபூர்வ கிரிக்கெட் போட்டிகளில் இவ்வாரம் கலந்து கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இன்று பிற்பகல் 2 மணி முதல் நாளை காலை 8.30 மணி முதல் சென்பற்றிக்ஸ் மைதானத்திலும் —

★ சென்ஜோன்ஸ் கல்லூரி அணி எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி இன்று பிற்பகல் 2 மணி முதல், நாளை காலை 8.30 மணி முதல் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும்—

★ யாழ் மத்திய கல்லூரி அணி எதிர் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி இன்று பிற்பகல் 2 மணி முதல், நாளை காலை 8.30 மணி முதல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும்—

★ யாழ். இந்துக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி நாளை காலை 8.30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

(இ-4-20)

யாழ். கந்தர்மடம் அரசடி வீதி

அருள்மிகு செல்வநாகபூஷணி அம்மன் ஆலய

கும்பாபிஷேக தினமும் தீமிதிப்பும் மண்டலாபிஷேக பூர்த்தியும்

11 - 2 - 1995 சனிக்கிழமை கும்பாபிஷேக தினம்

அன்று காலை 10.00 மணிக்கு அம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு திருவூஞ்சல் நடைபெறும். பின் அம்பாள் பெரும்தெரு வீதியுலா வருவாள்.

நிகழ்ச்சி நிரல்

பகல் 12-00 மகேஸ்வரபூசை (அன்னதானம்)
மாலை 4-00 பஜனை — சொற்பொழிவு
" 6 00 திருவூஞ்சல்

பாடுபவர்: பண்ணிசை அரசு

திரு. நா.வி.மு. நவரத்தினம் அவர்கள்
(விரிவுரையாளர் இசை, பண்ணிசைத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)

12 - 02 - 1995 ஞாயிற்றுக்கிழமை தீமிதிப்பு

காலை 10-00 தீமூட்டுதலும் பொங்கலும் நடைபெறும்.
மாலை 5-00 பூசை
மாலை 6-00 தீமிதிப்பு

அதன் பின் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும்.

10-02-1995 11-02-1995 12-02-1995
ஆகிய மூன்று தினங்களும்

அருள்மொழிச் செல்வர் வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.
(பரம்பரை அறங்காவலர் நயினை - நாகபூசணி அம்மன் ஆலயம்)

★ நாகம்மாளின் மகிமை ★
என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்

செ. குகநாதன்
ஆலய தர்மகர்த்தா

108. அரசடி வீதி,
கந்தர்மடம். (35132)

## அவசரமாக அறுவடை சந்தையில் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 10 குடாநாட்டுப் பகுதியில் உருளைக்கிழங்கின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கிலோ 20 ரூபாவில் இருந்து 25 ரூபா வரை வாங்கக் கூடியதாக உள்ளது.

புதிய வகை நோயொன்றினால் பாதிக்கப்பட்டு, முதிர்வடைந்து அறுவடைக்குத் தயாரான பயிர்போல-இலைகள் கருகிக் காணப்படுவதினாலேயே விவசாயிகள் அப்பயிரினை அவசரம் அவசரமாக அறுவடை செய்யத் தொடங்கியுள்ளனர்.

(இ-15)

## உடற்பயிற்சி போட்டி

யாழ்ப்பாணம், பெப். 10 சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளிடையிலான வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். கல்விவலயம் IIஇன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் முதன்மை விருந்தினராகவும் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-14)

## இத்தாவிலில் பாலர் பாடசாலை திறப்பு

தென்மராட்சி, பெப். 10 விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் பளை இத்தாவிலில் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலையை கடந்த ஞாயிறன்று பளை பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் திறந்து வைத்தார்.

தென்மராட்சி சமூக மேம்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் செல்வி பூவரசி தலைமையில் திறப்புவிழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பளை வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை அதிபர் க. கனகராசா இயக்கச்சி அ. த. க பாடசாலை அதிபர் க. இராமலிங்கம், பளை பலநோக்கக் கூட்டுறவுச் சங்க தலைவர் செ. மார்க்கண்டு உட்பட பலர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர் (ஐ-5]

## தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 10 தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட 5 ஆம், 8 ஆம், 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழீழ முதனிலை, இளநிலை பொதுக் கல்வித் தேர்வுகளில் தேசிய, கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் வண. பிரான்சிஸ் யோசேப் அடிகள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், யாழ். கல்வி வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, கல்வி வலயம் II இன் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி யாழ். பல்கலைக்கழக, கல்வியியல்துறைப் பேராசிரியர் வ. ஆறுமுகம், பரியோவான் கல்லூரி, நவீல்ட் பாடசாலை முகாமையாளர் வைத்திய கலாநிதி து வி. ஜெயகுலராஜா, யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்துவார்கள்.

[க]

## 3 நாட்களின் பின் சடலம் மீட்பு

வடமராட்சி, பெப். 10 குடத்தனை மேற்கிலுள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து மூன்று நாட்களின் பின்சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த கதிர்காமு தங்கவேலாயுதம் [48 வயது) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையாரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக நாகர்கோவில் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(க-173]

## 'கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், பெப். 10 பாஷையூர் மில்லர் கலைக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச கலை இரவு நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 6.30 மணி முதல் பாஷையூர் அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலைய அரங்கில் நடைபெறும்.

இதில் பதுவையர் கலாமன்றம் வழங்கும் 'விடிவைத் தேடும் பறவைகள்' நாட்டுக்கூத்து, புதிய தாரகை கலாமன்றம் வழங்கும் 'துரோகத்தின் பரிசு' கற்பனைச் சரித்திர நாடகம், மில்லர் கலைக்கழகம் வழங்கும் 'குமுறும் எரிமலை' இசை உரை வரலாற்று நாடகம் ஆகியவை இடம்பெறும்.

## டிப்ளோமா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், பெப். 10 யாழ். கல்வி வலயம் 2 இல் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாகவும், நிர்வாக உதவியாளர்களாகவும் கடமையாற்றுபவர்கள் டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பெறுவதற்கு கல்வி வலயம்- 2 இல் அமைந்துள்ள நிலையத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக குறிப்பிட்ட அனைவரையும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் கல்விவலயம் 2 இல் தவறாது சமூகமளிக்குமாறு யாழ்வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [இ-4[

## தமிழீழ கல்விக் கழக தேர்வுகள்: பரிசு பெறும் மேலும் சில மாணவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 10 தமிழீழ கல்விக் கழகத்தால் நடத்தப்பட்ட தமிழீழ முதனிலை, இடைநிலை, பொதுக்கல்வித் தேர்வுகளில் சிறப்பாகச் சித்திபெய்தி பரிசு பெறவுள்ள மேலும் சில மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முன்னர் வெளியிடப்பட்ட பட்டியலில் இவர்களின் விவரம் தவறுதலாக இடம்பெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விவரம் வருமாறு:-

### முதனிலைத் தேர்வு

### தேசிய மட்டம்

அனுஷா அற்புதராஜா — உடுவில் மகளிர் கல்லூரி, கௌசிகா மகாதேவா இந்து மகளிர் ஆரம்ப பா.

**நல்லூர் கோட்டம்**

ஜெகதாரினி கனகலிங்கம்— இந்து மகளிர் ஆரம்ப பா., யோ. சஞ்சீர் — கொக்குவில் இந்து ஆரம்ப பா.

**உடுவில் கோட்டம்**

கிரிஷாந்தி மகேந்திரன் — உடுவில் மகளிர் கல்லூரி, திவ்யா கனகசபேசன் — உடுவில் மகளிர் கல்லூரி.

**சண்டிலிப்பாய் கோட்டம்**

நளினி சங்கரநாதன்— சுதுமலை சிந்பயபாரதி வி.

**கரவெட்டிக் கோட்டம்**

பிரியதர்சினி இராதாகிருஷ்ணன்— நெல்லியடி மெ. மி. த. க. பா.

### முதனிலைத் தேர்வு

### தேசிய மட்டம்

**ஆங்கிலப் பாடம்**

இரத்தினம் சியாமளன் — மகாஜனக் கல்லூரி முதலாம் இடம், இ சோபர்ணா கரணவாய் பொன்னம்பல வி. முதலாம் இடம், பிரியதர்சினி இராதாகிருஷ்ணன்— நெல்லியடி மெ. மி. த. க. பா., முதலாம் இடம், சிந்துஜா ஜெயபாலசிங்கம் — இந்து மகளிர்ஆரம்ப பா. முதலாம் இடம், மதுரா இராகவன்— உடுவில் மகளிர் கல்லூரி முதலாம் இடம்.

### இளநிலைத் தேர்வு

**மருதங்கேணிக் கோட்டம்**

**பாடசாலை பெயர் மாற்றம்**

மேரிநெசில்டா சந்தியோகு —செம்பியன்பற்று றோ. க. த. க. பா., காயத்திரி சபாரத்தினம் – உடுத்துறை ம. வி.

### பொதுக் கல்வி

**ஆங்கிலப் பாடம்**

பத்தகௌரி செல்வரட்ணம் — இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்.

**சமூகக்கல்வி**

நவரத்தினம் மகேஸ்வரன் —யாழ். இந்துக் கல்லூரி இரண்டாமிடம். (ஐ)

## இன்று

வடமராட்சி, பெப். 10 வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொது மக்களின் வசதி கருதி அம்பனில் உப களஞ்சியம் ஒன்றை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் மேற்குப் பகுதி மக்களின் வசதி கருதி இந்த உப களஞ்சியம் திறந்து வைக்கப்படவுள்ளது. [க-173]

★ ★ ★

தொண்டைமானாறுசெல்வச் சந்நிதி ஆலய வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு இசைச் கச்சேரி இடம்பெறும்.

திரு. மணிசுந்தரம் பிரபாகரன் இசைக்கச்சேரி வழங்குவார். அறிமுகவுரையை திருமுருக கதிர்வேலன் ஆற்றுவார். [ஒ]

## ஆலயங்களில்

யாழ் மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான பருத்தித்துறை தும்பளை புனித லூர்து அன்னையின் வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 7மணிக்கு யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் —

கூட்டுத் திருப்பலியுடன் உற்சவம் முடிவடையும்.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆராதனைகள் ஆரம்பமாகி திருப்பலியும்' வழிபாடும் இடம்பெறும்.

இவ்வருடாந்த உற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (க173)

புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

சிங்களம் — E. S. பியதாசா

பயிற்றப்பட்ட சிங்களம் [விசேடம்]
[எழுத, பேச, வாசிக்க]

★ திணைக்களங்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கான விசேட வகுப்புகளும் நடைபெறுகின்றன.

[சி-348]

31- ம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 19-0) -1933

ஆண்டவன் அடியில்: 11 - 01 - 1995



அமரர்
கந்தையா மயில்வாகனம் B.sc
(இளைப்பாறிய ஆசிரியர் புங்குடுதீவு - 12)

அன்பிற்கும், பண்பிற்கும், அறிவிற்கும், இருப்பிடமாய் திகழ்ந்து குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த தங்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பெரிய தந்தையின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து துயரம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
சகோதரர், குடும்பத்தினர்
உறவினர்கள்.

'ரவி அகம்'
இணுவில் மேற்கு. (8234)

புதிய சம்பளத் திட்டத்துக்கு வசதியாக

## ஆசிரியர் சுயவிவர கோவைகள் மறுசீரமைப்புச் செய்யப்படும்

யாழ்ப்பாணம், பெப். 10 புதிதாக அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான புதியசம்பளத் திட்டத்தை வழங்குவதற்கு ஏற்புடைய முறையில் ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளன.

ஆசிரியர்களின் கல்வித் தகைமை, தொழில்சார் தகைமை, சேவை விவரம் என்ற அடிப்படையில் மறுசீரமைப்பு செய்யப்படும்.

இவ்வாறு சுயவிவரக்கோவைகள் மறுசீரமைப்பு செய்யப்படும்போது அடிப்படைக்கல்வித் தகைமைகள் இல்லாமல் ஆசிரியர் சேவையில் சேர்ந்து கொண்டோர் பற்றிய விவரங்கள் வெளியாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

[ஐ-11]

## தேசவிடுதலையை உயிராக கொண்ட உன்னதமானவர்களை தந்த கல்லூரி

### செங்குந்த இந்து வைரவிழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப். 10 ''கல்விப் புலத்தின் சிறந்த அறிவாளிகளை உருவாக்கியது மட்டுமன்றி செல்லக்கிளி அம்மான் போன்ற தேசவிடுதலையை உயிராகக் கொண்ட உன்னத மனிதர்களையும் இககல்லூரி உருவாக்கியுள்ளது''

— இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான திரு. அப்பையா அம்மான்.

கடந்த ஞாயிறன்று நடந்த யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் வைரவிழா மூன்றாம நாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இரா சிவச்சந்திரன் தலைமையில் விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

திரு. அப்பையா அம்மான் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

விஞ்ஞானத்துறையில் எமது மாணவர்களின் ஆர்வம் பெருக வேண்டும். எமது தேசம் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்க அது அவசியமாகும் —என்றார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலந்திரன் தனது உரையில் கூறியதாவது:-

நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு ஈடான கல்வி வளர்ச்சி கிராமப்புறப் பாடசாலைகளிலும் உண்டு.

எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலையில்தான் சேர்க்க வேண்டும் என்று எண்ணுவது தவறு. கிராமப்புறப் பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்து அப்பாடசாலைகளினதும், அப்பிரதேசத்தினதும் வளர்ச்சியில் பங்குகொள்ள வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு ஆகும்.

இந்தக் கல்லூரி தனது மாணவர்களின் உயர்வுக்கும், இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றியுள்ளது. அதன் பணி மேலும் விரிவடைய வேண்டும் —என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த சிரேஷ்ட விரிவுரையாளர் இரா. சிவச்சந்திரன் தமது உரையில் —

ஒருவனை திறமைமிக்க ஆளுமையுடைய மனிதனாக மாற்றுவதே கல்வியின் நோக்கம். அந்த நோக்கத்தை வெற்றிகரமாகச் சென்றடைவதற்கு பலருக்கு இக்கல்லூரி [illegible]

இலங்கையில் சுமார் 10 ஆயிரத்து 600 பாடசாலைகள் உள்ளன. ஆனால் ஒரு தடவை பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் இரண்டு வீதத்தினரே. ஏனையோரின் நிலை என்ன என்பதை சிந்திக்கத் தவறி விட்டோம். தமது பிள்ளைகள் பல்கலைக் கழகம் சென்று விட்டால் போதும் என்ற நோக்குடனேயே பெற்றோர்கள் செயற்படுகிறார்கள்.

கிறிஸ்தவ மத நிறுவனங்கள் போன்று எமது இந்துக் கோயில்களும் நிறுவன மயப்படுத்தப்பட்டு உயர் கல்வி வாய்ப்புகளுக்கு உதவ வேண்டும் — என்றார்.

வைர விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளின் மாலை நிகழ்வில் நல்லூர் திவ்விய ஜீவன சங்கத் தலைவர் திரு. கே. கனகரத்தினம், கல்லூரி அதிபர் திரு. மு. பரமேஸ்வரன், இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. சி. தமிழ்மறவன், வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் முன்னாள் அதிபர்களின் உருவப் படத் திரை நீக்கமும், ஆசிரியர் கௌரவிப்பும், வைரவிழா மலர் வெளியீடும் விழாவில் இடம் பெற்றன.

(ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய கருத்து வேறுபாடுகள் சமாதானத்துக்கு தடையாகக் கூடாது

## பௌத்த சகோதரத்துவ அமைப்பு கூறுகிறது

கொழும்பு, பெப் 10

சிறு சிறு கருத்து வேறுபாடுகளும், சம்பவங்களும் சமாதானத்துக்கான பயணத்துக்கு தடைக்கற்களாக அமையக்கூடாது.

உலக பௌத்த சகோதரத்துவ அமைப்பு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் அனைத்து பிரிவினரும் தமக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சமாதானத்தை விரும்பும் தென்பகுதி மக்கள் உங்களை நோக்கி தமது கரங்களை நீட்டுகிறார்கள். நீங்களும் சமாதானத்தை நோக்கி உறுதியான அடியை எடுத்து வைப்பீர்கள் என நம்புகிறோம்''— என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## பாராட்டு விழா

பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழாவில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மாவை பாராட்டும் விழா அண்மையில் இளைப்பாறிய அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது.

ஆலயபிரதம குருபிரம்மஸ்ரீ பா. வசந்தசர்மா பாராட்டுரையை வழங்கினார். (ஐ-5-30)

## கொலம்பியாவில் நிலநடுக்கம்

கொலம்பிய விண்டல பகுதிகளிலும் நேற்று முன்தினம் ஏற்பட்ட வலுவான பூமி அதிர்வினால், மேற்கு நகரான பொரேறாடாவில் 14 கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன் பலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்; பல கட்டடங்களும் சேதமடைந்தன.

இந்த நிலநடுக்கம் றிச்டர் அளவில் 6.4 ஆகக்காணப்பட்டது.

சேதமுற்ற கட்டடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளன (ஐ-5)

## புதிய வெதுப்பகம் திறப்பு

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொட்டைக்காட்டில் புதிதாக வெதுப்பகம் ஒன்றை நிறுவியுள்ளது

இவ் வெதுப்பகம் இன்று வெள்ளிக்கிழமை வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் திரு கா. சந்திரராசாவினால் திறந்து வைக்கப்படும். (ஐ-28-14)

# அம்பாறையில் புதிதாக காவலரண்கள் அமைப்பு

## படையினர் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 10

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை அமுலில் உள்ள இவ் வேளையில் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவம் தனது நிலைகளைப் பலப்படுத்தி வருவதால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

அம்பாறையிலுள்ள இராணுவ காவல் அரண்கள் பல புதுப்பிக்கப்பட்டு வருவதுடன், புதிதாக காவலரண்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறையின் அக்கரைப்பற்று, தாண்டியடி, காஞ்சிரங்குடா, அறுகம்பை ஆகிய இராணுவ முகாம்களிலேயே பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இதேவேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படுவோர் பிரதி வெள்ளி, சனிக்கிழமைகளில் முகாம்களுக்கு சென்று கையொப்பம் இடவேண்டும் எனப்படையினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போர் இடைநிறுத்தம் அமுலில் உள்ள நிலைமையில் ஏன் முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன என்று எம். பி. ஒருவர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இக் கேள்விக்கு அரச தரப்பில் இருந்து இதுவரை பதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [ஐ-5]

# புற்றுநோய்க் கலங்களை கட்டுப்படுத்த புதிய உத்தி

வாஷிங்டன், பெப். 10

புற்றுநோய்க் கலங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த அமெரிக்க விஞ்ஞானிகள் புதிய உத்தி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

கலிபோர்னியாவிலுள்ள 'ஸ்கிரிப்ஸ்' ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் ''செல்'' என்ற விஞ்ஞான சஞ்சிகையில் இது பற்றி எழுதியுள்ளார்கள்.

புற்று நோய்க்காரணியான கட்டுப்பாடில்லாமல் பெருகும் கலங்களுக்குரிய குருதி விநியோகத்தை நிறுத்துவதன் மூலம் கலங்களை பட்டினி போட்டு கொல்லுவதே இம்முறையாகும்.

குருதிக் குழாய்களின் வளர்ச்சி உயிரியலில் மிகவும் சிக்கல் வாய்ந்தது. பல ஆண்டுகளாக இது தொடர்பான வழிவகைகளை ஆராய வேண்டியிருந்தது. புற்று நோய்க் கலங்கள் அருகிலுள்ள குருதிக் குழாய்களிலிருந்து குருதியை பெற்றே பெருகுகின்றன.

புற்றுநோய்க்கலங்கள் குருதிக்குழாய்களைத் தூண்டுவதற்கு காரணமான உயிரிரசாயனத் தூண்டியை தாங்கள் கண்டு பிடித்துள்ளதாகவும்—

அத் தூண்டியை செயலிழக்கச் செய்வதன் மூலம்புற்றுநோய்க்கலங்கள் குருதி பெறுவதை தடுக்கலாம் என்றும்— விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பரீட்சார்த்தமான இந்த முயற்சியில் வெற்றி கிட்டியுள்ளதால் இதனை 1996 ஆம் ஆண்டளவில் மனிதரில் பரீட்சித்துப் பார்க்க விஞ்ஞானிகள் முடிவெடுத்துள்ளனர். [க-14]

# நுளம்பினால் நோய்கள் வேகமாகப் பரவும் ஆபத்து

## சுகாதார அதிகாரி எச்சரிக்கை

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களினால் நுளம்பினால் பரவும் தொற்று நோய்கள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டின் கிழக்குப் பகுதிகளில் நுளம்பினால் பரவும் நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. எமது பகுதியிலும் குறிப்பாக மலேரியா காய்ச்சல், டெங்கு காய்ச்சல் என்பன கூடி வருவதைக் காண்கிறோம்.

நாம் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தா விட்டால் ''ஜப்பான் பீ வைரஸ்'' என்னும் கிருமியினால் ஏற்படும் மூளைக்காய்ச்சல் பரவும் சாத்தியம் உண்டு.

இவற்றைக் கட்டுப்படுத்தும் தடுப்பு நடவடிக்கைகளை மாநகரசபை மேற்கொண்டுள்ளது. [ஐ]

## பாடசாலைகளில்

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை அதிபர் திரு. எஸ். தங்கராசா தலைமையில் நடைபெறும். (ஐ-11)

# மின் விநியோக வேலை விரைவில் ஆரம்பம்

## முகாமையாளர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், பெப் 10

யாழ். குடா நாட்டுக்கு மீண்டும் மின் வழங்குவதற்கு வேண்டிய திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்த வேலைகளை மேற்கொள்ள அனுராதபுரத்தில் பணியாற்றும் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் திரு. வி. இராஜேந்திரம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

இதேவேளை—

மின் இணைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ள மின்சார சபையின் யாழ். அலுவலக பொறியியலாளர் ஒருவர் கடந்த வாரம் கொழும்பு சென்றுள்ளார் (ஐ-3)

# அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு குறித்து ஆராய மனித உரிமைக் குழு

## விரைவில் கொழும்பு விஜயம்

கொழும்பு, பெப். 10

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் உயர்மட்ட அரசியல் தலைவர்களின் மனித உரிமை பாதுகாப்பு குறித்து ஆராய சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று கொழும்பு வரவுள்ளது.

இவர்கள், இலங்கையின் மனித உரிமைகள் பாதுகாப்பு குறித்தும் — ஜனாதிபதி மற்றும் உயர் மட்ட அரசியல் தலைவர்களின் மனித உரிமைகள் பாதுகாப்புக் குறித்தும் ஆராய உள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-5-3)

# புலமைப் பரிசில் மாணவர் ஜப்பானுக்குச் செல்வர்

சென்ற வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மிகத்திறமையான முறையில் சித்தியடைந்த 8 மாணவர்கள் ஜப்பானில் 2 வாரகால இலவச சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தச் சுற்றுப் பயணத்திற்கென 5 சிங்கள மாணவர்களும், 2 தமிழ் மாணவர்களும், ஒரு முஸ்லிம் மாணவரும கணனி மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் இடம்பெறவுள்ள இச்சுற்றுப் பயணத்தில் மாணவர்களுடன் ஆசிரியை ஒருவரும் செல்லவுள்ளார். (ஐ-5-4)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், பெப் 10

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி இராமலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவ ஆரம்ப நாளான இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 6-30 மணிக்கு சுவாமிவீதி உலாவும் இடம் பெறும். (ஐ 5-17)

★ ★ ★

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலய 4 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு ''தெய்வம் என்பதோர் சித்தம்'' என்னும் பொருளில் ஆசிரியர் ஆறு. திருமுருகன் அவர்களின் சொற்பொழிவு இடம் பெறும். (ஐ-5-30)

★ ★ ★

சுண்டிக்குளி கொய்யாத் தோட்டம் புது வீதி ஸ்ரீஞான செல்வவிநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் (ஐ-14)

## புத்தக கண்காட்சி

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம ஆதரவில் விவேகானந்த புத்தகக் கண்காட்சி ஒன்று கடந்த மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் இக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

கண்காட்சி முடிவில் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சுவாமி சித்ரூபானந்தா நூல்களை வழங்கினார். (இ-14)

# போதைவஸ்து பாவனை: கட்டுப்படுத்த புதிய திட்டம்

கொழும்பு, பெப். 10

தென்பகுதியில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த புதிய திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. பொலீஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகம் இத்திட்டத்தை அமுல் செய்யும்.

இத்திட்டத்தின் பிரகாரம் போதைப் பொருள்பாவனை, விநியோகம் ஆகியவற்றை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் தீங்குகள் பற்றி மக்களுக்கு எடுத்து விளக்கும் சுவரொட்டிக் கண்காட்சிகள் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நடத்தப்படும்.

போதைப் பொருள் விநியோகத்தினைக் கட்டுப்படுத்த விசேட பயிற்சிபெற்ற அதிகாரிகள் திடீர் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். நாடுமுழுவதும் சுமார் 75 ஆயிரம் பேர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்றும்—

கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி பிரதேசங்களிலும், மேற்கு கரையோரங்களிலுமே போதைப் பொருள் பாவனை அதிகமாக காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-14)

# புலிகளின் குரல் வானொலியில்

### 10 — 02 — 1995

### வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி— நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் ''இசை பாடும் திரிகோணம்'' ஒலிப்பதிவு நாடா, சிறுகதை — வ. கற்கண்டு எழுதிய ''போட்டி'' கவிதை— ந. கிருஷ்ணா எழுதிய ''வல்லமையே வாழ்வு''

★ 8-25—கனப்பொழுது - போராளி தி. தமிழரசன் எழுதிய ''மேஜர் பிரசாத்''

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம் — வே. பாலகுமாரன் எழுதிய '' ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ?''

★ 8-50 — வாத்திய கானம்

★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### 11— 02 — 1995

### சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

★ 8-00— மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# தமிழீழ வானொலி

### ஒலிபரப்பு

### வெள்ளி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்

★ 5-02 — எழுச்சிக் கீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 —கனநேரக் காவியங்கள்

★ 5-30 — மண்ணின் குரல் — ''நாங்கள் கெதியா முன்னேறி விடுவோம்''தனி நடிப்பு

★ 5-40 — நேயர் கடிதம்

★ 5-45 — வெற்றிச் சுவடுகள்

★ 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்

★ 6-02 — நாடகம்— தாவையூரான் எழுதிய ''ஞானம் பிறந்தது''

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்

★ 6-20 — என் தெரிவு

★ 6-30 —மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

# பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை மிதித்துக் கொண்டிருக்கக் கூடாது

## இனவாதத்தை தென்பகுதி மக்கள் நிராகரித்து விட்டனர்

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு எதிர்நோக்க வேண்டியுள்ள மிக முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று இனவாதப் பிரச்சினையே. இதை இந்த அரசு தீர்த்து வைக்க வேண்டும்.

கடந்த வருடங்களில் இந்தப் பிரச்சினை மேலும் மேலும் வளர்ச்சி பெற்றதே யொழிய தீர்ந்தபாடில்லை. இதனைத் தீர்க்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிற்சில சமயங்களில் இதைத் தீர்ப்பதற்காகச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் அவை யாவும் குறுகிய சிந்தனைப் போக்கில் அமைந்ததால் சரி வரவில்லை. ஆகையினால் இந்த விடயத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு மிகக் கவனமாகச் செயற்பட்டு இதற்கான தகுந்த தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

அண்மையில் நடந்த தேர்தல்களுக்கு முன்பாக தமது கொள்கை விளக்கத்தில் இந்த அரசு இனப்பிரச்சினை தொடர்பான தெளிவான அரசியல் தீர்வொன்றுக்கான சாத்தியக் கூறுகளை முன்வைத்திருந்தது.

இதற்கு எதிராக, கடந்த அரசும், இனவாதத்தினைக் கக்கி வருகின்ற சில சிறிய அரசியல் கட்சிகளும் பலவித கருத்துக்களை முன்வைத்ததுடன் கடந்த தேர்தல்களின் போதும் இதனையே தமது பிரசாரமுமாக முன் எடுத்துச் சென்றன.

எனினும் இந்த நாட்டு மக்கள் நம் நாட்டு அரசியல்வாதிகளை விடப் புத்திசாலிகள் என்பதனை கடந்த தேர்தல்களின் மூலம் நிரூபித்து விட்டனர்.

கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது ஐ.தே.க. இனவாதத்தை தனது முக்கிய பிரசாரமாகக் கொண்டு செயல்பட்டது.

இனவாதத்துக்கு எதிராகத் தென்பகுதி மக்கள் வாக்களித்தனர். அதன் பின்னரும் அவ்வரசு இனவாதத்தைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினது (மரம் செடி, கொடி போன்ற) சில பேச்சுக்கள் சிறுபான்மை இன மக்களை வெகுவாகப் பாதித்தன.

### கடந்த காலத்தில் இனவாதம் வேகமாக வளர்ச்சி

கடந்த காலங்களில் இனவாதப்பிரச்சினை மிக வேகமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

எமது நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக இந்த நாட்டில் குறுகிய இனவாத போக்குகள் காணப்பட்டுள்ளன.

எனினும் சுதந்திரத்தின் பின்பு இந்த நாட்டில் இப்பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்தது.

இதற்குக் காரணம் பெரும்பான்மை மக்கள் மூலமாகச் சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகள் மிகவும் கொடுமையானவையாக இருந்தமையேயாகும்.

எமது நாட்டின் சுதந்திரப் போராட்டத்தினை இரு இனத்தாருமே முன்னெடுத்துச் சென்றனர். இதன் பின்னர் 1956 இல் மொழிப் பிரச்சினை மூலமாகச் சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

ஒன்றாக இணைந்து சுதந்திரப் போராட்டத்தினை முன்னெடுத்துச் சென்று சுதந்திரமும் பெற்றதன் பின்னர் சிங்களத்தை மட்டும் அரச மொழியாக்கியமை உண்மையிலேயே மனித உரிமைகளை மீறும் செயல் என்றே கருத வேண்டும்.

இதன் மூலமாக இனங்களுக்கிடையே இருந்த நம்பிக்கை அற்றுப் போயிற்று. இது போன்ற அநீதிகள் பல நடந்துள்ளன. 1972இல் பல்கலைக்கழக தரப்படுத்தல் சீர்திருத்தம் தமிழ் இளைஞர்களை வெகுவாகப் பாதித்தது. எவ்விதமான அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களால் மேற்கொள்ளப்பட்ட அநீதிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

யாழ்ப்பாணமாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் இந்த நாட்டு இனப்பிரச்சினையில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

அதுவரையில் அம்மக்கள் எவ்விதப் போராட்ட இயக்கத்துடனும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. 1977 பொதுத் தேர்தலில் 17 ஆசனங்களை வென்று இந்த நாட்டின் எதிர்க்கட்சியாக வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உண்மையிலேயே ஒரு புனரமைப்புக் குழுவாகும்.

தம்மைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உண்மையான விடுதலை உணர்வு கொண்டவர்கள் அல்லர் என்ற கருத்தினை இவ் இளைஞர்கள் கொண்டிருந்தனர்.

இதன்படி இவர்கள் பல ஆயுதக் குழுக்களின் கீழ் ஒன்றிணைந்தனர். இதன் இறுதிக் கட்டமாக இன்று விடுதலைப்புலிகள் இயக்கம் உருப்பெற்றுள்ளது.

இந்த இயக்கத்தினர் தம்மை எதிர்க்கும் எவரிலும் இன, மத, மொழி வேறுபாடு பார்ப்பதில்லை.

இவர்கள் ஏன் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதை யாரும்சிந்திப்பதில்லை.

பின்னர் நம் நாட்டில் ஏற்பட்ட சில அரசியல் காரணங்களை முன்வைத்து இலங்கை அரசு இந்தியாவின் உதவியை நாடியது.

இதன்படி 1987 இல் இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்தானது.

இந்த நாட்டில் மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது பலரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் மாகாண சபை முறை வடக்கு — கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வேண்டியே கொண்டு வரப்பட்டது.

எனினும் இன்று இது பயனற்றதாக இருக்கிறது வட-கிழக்கில் மாகாண ஆட்சி இடையாது.

ஆர். பிரேமதாச இந்த நாட்டு ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் இப்பிரச்சினை வேறு திசை நோக்கிச் செல்லலாயிற்று. அதாவது இலங்கையில் இருந்த இந்திய இராணுவம், வெளியேறியது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டனர். இதன்மூலமும் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வரவில்லை.

இன்று நாம் பார்க்க வேண்டியது இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதே.

### இனங்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

தீர்வு எந்த விதத்திலாவது அமைய வேண்டும்; அந்தத் தீர்வின் அடிப்படையில் நாட்டின் ஒருமைப்பாடும் இனங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியது யாதெனில் இந்த நாட்டின் பெரும்பான்மை இனம் சிறுபான்மையினரை மிதித்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதையே அவர்களுக்கான சந்தர்ப்பங்களை நாம் வழங்க வேண்டும்.

கடந்த காலங்களில் விட்ட பிழைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலமாகத் தினந்தோறும் அழிந்துவரும் மனிதவளம் செல்வம் போன்றவற்றைக் காத்து நாட்டின் அபிவிருத்திக்கு அவற்றை உபயோகிக்க வேண்டும்.

இனங்களுக்கு இடையிலான பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். சகலரதும் கருத்துக்களை வரவேற்கக்கூடிய சிந்தனைப் போக்கினை உருவாக்க வேண்டும்.

[நன்றி ' தவல்'']

# உடற்பயிற்சி போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 10

நல்லூர், யாழ்ப்பாணம் கல்விக் கோட்டங்களின் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயம் - I கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரிய தம்பியும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்ட மாணவர் அமைப்புச் செயலாளர் திரு ப. சங்கரும் கலந்து கொள்வர். [ஐ-14]

# மகப்பேற்று சிகிச்சை நிலையம்

கொழும்புத்துறை, பெப் 10

யாழ். கைதடி ஆயுர்வேத மருத்துவ மனையில் மகப்பேற்று பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அங்கு பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மகப்பேற்று பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்குப் பொறுப்பாக வைத்தியகலாநிதி திருமதி ஜி பவானி பணியாற்றி வருகிறார். [ஐ-30]

Digitized by Noolaham Foundation

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள், முயல்கள், லவ் பேட்ஸ் உடன் விற்பனைக்குண்டு. இல. 27, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பின்னால்) (35045)

## விற்பனையாகின்றன

எல்லாவித டயறிவகைகள் கொழும்பு விலையில் விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு. பிற்மன், மோட்டார் புக் பிற்மன் டைப்பிரைட்டிங் புக் வியாபாரிகள் தமது விலாசம் அச்சடித்துக் கொடுப்பதற்குரிய கலண்டர் புதியவை. திருமண அழைப்பிதழ் கார்ட் அச்சிடுவதற்கு, பிறந்த நாள் வாழ்த்து மடல் மலிவு விலையில்; ஸ்ரீகாந்த் புத்தகசாலை யாழ்., மக்மிலன் புத்தகசாலை யாழ். [சி-358]

1995ஆம் ஆண்டுக்கான திறமான வண்ண வண்ண படங்களுடன் கூடிய கலண்டர் படங்கள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். (தொகையாகப் பெறுபவர்களுக்கு அச்சக பதிவுக் கூலி இலவசம் ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறைசாலை யாழ்ப்பாணம். [சி-531]

## ரி. வி. டெக திருத்துதல்

சகல றேடியோக்களையும், ரி. வி. டெக், எல்லாவித மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], வானவில் அருகில் யாழ்ப்பாணம், கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-362]

## ACCOUNTANCY

G. C. E. A/L 1980—1994 க. பொ. த. உயர்தரம் கணக்கியல் பரீட்சை வினாக்கள் தொகுப்பு: இ. செல்வநாயகம் B.Com. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-365]

## மணமகன் தேவை

யாழ். இந்து பெற்றோர் அவுஸ்திரேலியாவில் பதிவிடம் பெற்ற 27 வயது நிரம்பிய செவ்வாய் தோஷமுள்ள Dip-in-Accountancy முடித்த மகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல 756, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (35054)

## வாடகைக்கு வீடு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. முழுமையாகவோ, பகுதியாகவோ இருக்கலாம். மாநகர எல்லைக்குள் அல்லது கொக்குவில் – கோண்டாவிலில் விரும்பத்தக்கது தொடர்புகொள்ளவும்: வி. இல. 758, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (35112)

## தவறிவிட்டது

சோயா நேர்த்திக் கடனுக்காக கொண்டு செல்லப்பட்ட தங்க கைச்சங்கிலி தாவடிக்கும், மானிப்பாய்க்கும் இடையில் 6-2-95 அன்று தவறிவிட்டது கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். இல. 15, சென் பீற்றர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-539)

## வகுப்புகள்

கேக் ஐசிங், பூ வேலை, தையல் வகுப்புகள் ஆரம்பம்: 11-2-95 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி. கட்டணம் ரூபா 50/- சேர விரும்புவோர் தொடர்புகொள்ளவும். மார்க்கோ, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (35118)

---

**A/L 95** மீட்டல் வகுப்புக்கள்

(A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
கலை, வர்த்தக வகுப்புக்கள்

✶ சனி – ஞாயிறு நாட்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்,
(சி-371)

---

# கேக் ஐசிங் கண்காட்சி

திருமதி R. செல்வராணி தேவராஜாவும் அவரது மாணவிகளாலும் நடத்தப்படும்.

காலம்; 1995 பெப்ரவரி மாதம் 11. 12. 13. 14 தினங்களில் மு.ப. 8-00 மணி முதல் பி.ப. 7-00 மணி வரை

✶ கலியாண கேக் வடிவமைப்புகள்
✶ பிறந்த நாள் கேக் வகைகள்
✶ மாச்சினி மலர் வகைகள்
✶ தையல் பூ வேலைப்பாடுகள்

இடம்:
**ஜெயா கேக் ஐசிங் சென்ரர்**
இல. 7, ஜெயமஹால் கற்குளி ஒழுங்கை, சாவகச்சேரி.

ஆதரவாளரும், இவ்விளம்பரத்தற்கு உதவி அளிப்பவர்களும்
லீவர் பிறதர்ஸ் தயாரிப்புகளான
லிப்டன், லாவேஜி, சிலோன்ரா, டாசா தேயிலை வகைகள், றின்சோ போன்றவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் விநியோகிக்கும், விநியோகஸ்தர்களான

**ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

★ எமது நிறுவனத்திற்கு தேவையான ஐசிங் சுகர், பிளைவ் மாஜரீன், ஐக்கோ, பட்டர், பேக்கிங் பவுடர் என்பவற்றை மொத்தமாகவும், மலிவான விலையிலும் விநியோகிப்பவர்கள் இவர்களே. [8225]

---

சுழிபுரம்
ஸ்ரீ வீரபத்திரஸ்வாமி உடனுறை
**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**
புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**10 02—95** வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகும். 12-30 மணியளவில் ஸ்தூபி அபிடேகமும், 12-45 மணிக்கு மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும்.

அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

மண்டலாபிஷேகம் தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும்.

தேவஸ்தான பரிபாலனசபை.
(35123 சுழிபுரம்.

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 26 – 05 – 1947 | 22 – 01 – 1994 |

**அமரர் ஆறுமுகம் தனபாலசிங்கம்**
(கருணாநிதி)
[முன்னாள் கிராம சேவையாளர், கந்தரோடை]

திதி: 10 — 02 — 1995

உங்கள் பிரிவால் நாம் உளம் நலிந்து, நலமிழந்து கலங்குகின்றோம்! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் நினைவில்;
தாயார், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம். [35115]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 27 – 07 – 1968 | 22 – 01 – 1994 |

செல்வி
**செல்வரத்தினம் தேன்மொழி**

திதி: 11 – 02 – 1995

எங்கள் ஆருயிர் செல்வத் தேன்மொழியே!

அன்பு நிறைந்த, பாச மழை பொழிந்த, அமுத மொழி சொரிந்த, புன்சிரிப்புத் தவழ்ந்த உமது சுந்தரவதனத்தின் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டு ஒருகணமேனும் நீங்காதம்மா!

வனஜா: தேன்மொழி! எனப் பாசமாய் அழைத்த இதழ்கள் இன்னும் ஓயாது அழுதழுது புலம்பிக் கொண்டு தானம்மா இருக்கின்றன. எங்களைத் தவியாய்த் தவிக்க விட்டு விட்டுப் பாதிவழியில் பரமனடி சேர்ந்து விட்டாயே அம்மா!

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை அல்லும் பகலும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்;
அன்பு அப்பா அம்மா, அண்ணன்,
அக்காமார், அத்தான்மார், அண்ணி,
அம்மம்மா, அப்பம்மா,
பெரியப்பாமார் குடும்பத்தினரும்,
பிள்ளைகளும்,
சிற்றப்பாமார், குடும்பத்தினரும்,
பிள்ளைகளும்,
மாமாமார் குடும்பத்தினரும்,
பிள்ளைகளும்,
[illegible] உறவினர்களும்

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி. [சி/361]

---

# திருமண நன்றி நவிலல்

## கோணேஸ்வரன் சத்தியபாமா

**22 — 01 — 1995** இல் எமது இல்லத்தில் நடைபெற்ற கோணேஸ்வரன் – சத்தியபாமா தம்பதிகளின் திருமண வைபவத்தில் நேரடியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் மூலமாக தமது அன்பை பரிமாறியவர்களுக்கும், என்னுடன் உறுதுணையாக நின்று உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை எனது குடும்பத்தின் சார்பிலும், மணமக்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்வதுடன், தனித் தனியாக எமது நன்றியறிதலை தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இங்ஙனம்:
ச. சடாட்சரநாதன்.

மருதடி,
பருத்தித்துறை.
09 – 02 – 1995 [35125]

---

## அராலியில் பற்சிகிச்சை

அராலி மேற்கு கோட்டைக்காட்டில் அமைந்துள்ள அரசினர் கிராம வைத்திய சாலையில் இந்த ஆண்டு தொடக்கம் பற்சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நோயாளருக்கான பற்சிகிச்சையை சங்கானை அரசினர் வைத்தியசாலையின் பற்சிகிச்சை வைத்திய அதிகாரி, செவ்வாய்க்கிழமை தோறும் கோட்டைக்காடு வைத்தியசாலையில் அளித்து வருகிறார். [இ-12-5]

---

இளங்கலைஞர் மன்றம்

# 15 ஆவது இசை விழா

காலம்: 11 - 02 - 95 — 25 - 02 - 95
(15 தினங்கள்)

நேரம்: தினமும் பி.ப 4 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை

இடம்: மன்றக் கலாமண்டபம்

ஈழத்தின் முன்னணிக் கலைஞர்களும் இளங்கலைஞர்களும் வழங்கும் மங்கள இசை, கூட்டிசை, வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, பரதநாட்டியம், நாட்டியநாடகம், நவீன நாடகம், வில்லிசை முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

[C/520] — மேற்படி மன்றத்தினர்

---

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு**
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**1. B A, Part I, II**
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**2. B. A. (Final)**
(போராதனை பல்கலைக்கழகம்)

விரிவுரைகள் **04-02-95** இல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

அரசறிவியல்:
S. S. சிலன்
(சி-368)

---



உ
யாழ்ப்பாணம் – திருநெல்வேலி
அருள்மிகு

## 'ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வரலாறு'

(ஆக்கியோன்: திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி)

# நூல் வெளியீட்டு விழா

இடம்: திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மண்டபம்.

காலம்: நிகழும் பவ வருஷம் தைத் திங்கள் 29ஆம் நாள் (12-2-1995) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

தலைவர்: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்: செல்வி புஸ்பா செல்வநாயகம் B Sc.
(இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி)

✶ நிகழ்ச்சிகள் ✶

● பூசையும், வழிபாடும் ● மௌனாஞ்சலி ● நூல் வெளியீடு

முதற்பிரதி பெறுபவர்: திரு. சண்முகம் சங்கரலிங்கம்
(உரிமையாளர் கணேசா நகையகம், 194, சந்தோசம் தெரு யாழ்ப்பாணம்)

நூல் அறிமுகவுரை:
1. திரு. எஸ். சிவலிங்கராஜா M. A.
(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
2. திரு. மா வேதநாதன் M. A.
(சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

நூல் ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்து விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்

நன்றியுரை: நூலாசிரியர் திரு. வை. அநவரதவிநாயகமூர்த்தி

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம்:
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 9-2-1995.
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

வாழ்த்துவோர்:
**செந்தூரன் களஞ்சியம்** — பலாலி வீதி திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி
**நியூ யாழ். சைனீஸ்** — 124, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(35120)

---

உ
பிள்ளையார் துணை

## புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளால் நிகழும் பவ வருடம் தை மாதம் 27 ஆம் திகதி இன்று (10-02-1995) வெள்ளிக்கிழமை காலை 8-12 — 10-00 மணி வரை வரும் கும்பலக்கின சுபவேளையில்,

எம்மால புதிதாக அமைக்கப்பட்டுள்ள

## "ஜமுனா வாணிப நிலையம்"

என்னும் பல்பொருள் வர்த்தக நிலையத் திறப்பு விழாவுக்கு தாங்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதன்மைச்சாலை,
நெல்லியடி,
கரவெட்டி.

இங்ஙனம்:
அன்புள்ள,
மு. இராஜகோபால். (35128)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இரட்டை வேடம் வெளிச்சத்தில்!

புதிய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் மக்களின் வாழ்க்கைச் சுமையைப் போக்குவதற்கு வகை செய்யக்கூடியதாகப் புதிதாக ஒன்றுமில்லை. அதேபோன்று நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான 'அற்புதமான' வழிதுறைகளும் அதில் இல்லை.

மொத்தத்தில் தென்பகுதி மக்களின் எதிர்பார்ப்பு வீண் போய்விட்டது. வரவு-செலவுத் திட்டத்தில் பெரிதாக எதுவும் இல்லை. குறிப்பிட்டுக் கூறுவதற்கு மிகக் குறைந்த அம்சங்களுடன் கூடிய ''சப்'' பென்ற வரவு-செலவுத் திட்டமாகவே காணப்படுகிறது!

கடந்த பதினேழு வருடங்களாக ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் வரவு-செலவுத் திட்டங்களுக்கும் புதிய அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்குமிடையில் நிறைய வேறுபாடுகள் இருக்கும் என்று நினைத்தவர்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே இருக்கும். அனேகமாக இவ்வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டமும் பழையனவற்றை ஒத்ததாகவே இருக்கிறது!

உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் ஆளுமைக்கு உட்பட்டே முன்னர் நாட்டின் பொருளாதார கொள்கைகளும், நடைமுறைகளும் அமைந்திருந்தன. புதிய அரசாங்கமும் அந்தச் செல்வாக்கு அல்லது அழுத்தத்திலிருந்து விடுபட முடியவில்லை என்பது வரவு-செலவுத்திட்டத்தில் பிரதிபலிக்கிறது.

இந்த வரவு-செலவுத் திட்டம் தெற்கு மக்களின் அதிருப்தியையும், எதிர்ப்பையும் சம்பாதிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இதனைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி அரச எதிர்ப்பு இயக்கத்தை வளர்க்கத் தொடங்கும் என்பதனையும் நிச்சயமாகச் சொல்லலாம்.

தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் புதிய அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டம், அரசு மீது அவர்கள் கொண்ட நம்பிக்கையை வெகுவாகக் குறைக்க வழி செய்துள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அதன் இரட்டை வேடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போகிறோம்; போரை முடிவுக்குக் கொண்டுவரப் போகிறோம்; போருக்குச் செலவிடப்படும் பணத்தை மக்கள் நலன் விளைக்கும் திட்டங்களைச் செயற்படுத்தப் போகிறோம்; மக்கள் அழிவை நிறுத்தி ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம்; புதிய சமூகத்தை கட்டி எழுப்புவதற்கான இனிய கனவு காண்கிறோம்— என்றவாறெல்லாம் இனிக்கப் பேசிய அரசு...

இராணுவச் செலவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒதுக்கிய பணத்தைவிட 425 கோடி ரூபாவைக் கூடுதலாக ஒதுக்கியுள்ளது!

அரசின் இந்தச் செயற்பாடு, அதற்குப் போரிலேயே அதிக நம்பிக்கை உண்டு. இராணுவத்தின் தயவினை ஒதுக்கிவிட, புறக்கணிக்க அது கனவிலும் நினைக்கவில்லை என்ற அதன் நிலைப்பாட்டை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

அது மட்டுமா? பேச்சுவார்த்தையிலிருந்து சறுக்கிப் போய் தமிழ் மக்கள் மீது இராணுவ ஆதிக்கத்தைப் பயன்படுத்தி, அவர்களை அடிபணிய வைக்கலாம் என்ற உள்நோக்கம் அரசுக்கு உள்ளதாலேயே படைபலத்தைப் பெருக்க, வளர்க்க அதிக நிதி ஒதுக்குகிறது என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கிறது. அல்லவா?

போருக்கு முடிவு கட்டுவதிலும், அரசியல் தீர்வு காண்பதிலும், சமாதானத்தைக் காண்பதிலும் சந்திரிகா அரசுக்கு சிறிதளவேனும் நம்பிக்கை இருப்பின் —

இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்குவது ஏன்? எந்தச் சிறுபிள்ளையும் கேட்கும் கேள்வி இது.

அரசாங்கத்தின் பதில் என்ன? வெறும் சப்புக்கட்டையா? அதனை நம்புவதற்கு தமிழர்கள் தயாரில்லை. ஏமாறவும் மாட்டார்கள்.

# அரசின் வரவு- செலவுத் திட்டத்தை ஐ. தே. கட்சி எதிர்த்து வாக்களிக்கும்

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, பெப். 10

தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி வாக்களிக்கும்.

—எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பல தேர்தல் வாக்குறுதிகளை அமுல்படுத்துவதற்கு வரவு-செலவுத் திட்ட யோசனைகள் தவறிவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை—

நாட்டின் பலமான பொருளாதாரம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கான யோசனைகள் எதுவும் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ஏ. சி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தை தொடக்கி வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசு பதவிக்கு வர முன்னர் கொடுத்த வாக்குறுதிகளை வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றவில்லை.

கடந்த வருடத்தில் பெறப்பட்ட பொருளாதார முன்னேற்றம் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

ஏற்றுமதித் துறையினைப் பலப்படுத்தாமல் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சாத்தியமற்றது.

தற்போதைய வரவு-செலவுத் திட்டம் மூலம் கூடுதலான வெளிநாட்டு முதலீடுகளை தனியார்துறை பெற்றுக்கொள்ளும் என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பாடுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.—

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார், (ஐ-5-14)

## தகைமை பெறாதோருக்கு உதவ திறந்த பாடசாலை

### தேசிய கல்வி நிறுவனம் அமைக்கும்

கொழும்பு, பெப்.10

வானொலி மூலப் பாடங்கள், தபால் மூலப் பாடங்கள் ஆகியவற்றை நடத்தும் ''திறந்த பாடசாலை'' அமைப்பு ஒன்று அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று தேசியக் கல்வி நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் அறிவித்தார்.

எழுதவும்வாசிக்கவும் கூடிய ஆனால் வேலைபெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் இல்லாதவர்களுக்கு உதவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இரண்டு மூன்று ஆண்டு கால இந்தத் தபால் மூலக் கல்விப் பாடசாலையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் சேர்ந்து கொள்ளலாம்.

இப்பாடசாலை வானொலி, தொலைக் காட்சியிலும் பாடங்களை நடத்தும் என்று தேசியக் கல்வி நிறுவனப் பணிப்பாளர் டாக்டர் பிரேமதாச உடகம தெரிவித்தார்.

இந்தப் படிப்பு முடிவில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை போன்ற பரீட்சை நடத்தப்பட்டு பத்திரங்கள் வழங்கப்படும்.

பாடசாலையின் படிப்பில் தொழில் நுட்பப் பாடங்களுக்குமுக்கியத்துவம் கொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (க)

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், பெப். 10

வேலணைக் கோட்ட தொலைக்கல்வி பயிற்சி நெறி அனைத்துபிரிவு பயிற்சி ஆசிரியர்களும், பரீட்சைக்கான தகவல்களைப் பெறும் பொருட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு தொலைக்கல்வி போதனாசிரியர் எஸ். யோகராஜா அறிவித்துள்ளார். (ஐ-5)

## நீரிழிவு நோய் இலவச கைநூல்

சண்டிலிப்பாய், பெப்.10

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் நீரிழிவு நோய் தொடர்பான இலவச கைநூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

இந்நூலை யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட உடற்றொழிலியல் துறைத் தலைவர் டாக்டர். கே. சிவபாலனின் ஆலோசனையுடன் மருத்துவபீட மாணவரான ஸ்ரீ. மாறன்கரன் எழுதியுள்ளார். (இ-135-5)

## தயிரில் நெய் போன்றவன் ஆலயத்துறையும் இறைவன்

சைவப் பெரியார் சிவபாதசுந்தரமவர்கள் திருவாசகம் பற்றிக் குறிப்பிடும்போது —

''சைவனுக்கழகு திருவாசகம் படித்தல், திருவாசகம் படித்தவன் இந்தப் பிறவி எடுத்ததைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தப் பிறவி எடுத்ததின் பயனை அவன் பெற்றுவிட்டான்.

''அரியதாகிய மானிடப் பிறவி எனக்குக் கிடைத்ததே. எழுபது வருஷம் இந்த உடம்போடு வாழ்ந்தேனே. இந்

### ஞானக்கதிர்

தப் பிறவியிலே, இந்த வயதிலே உயிர்க்கு உறுதியாகிய, நான் தேடிய தேட்டம் யாது'' என்றொருவன் தன்னை வினாவும் போது, அவன் திருவாசகம் படித்தவனாயின், 'ஆகா! நான் திருவாசகம் படித்தேனல்வா; அது இதைப் போன்ற பத்துப் பிறவிகளுக்குப் போதுமே' என்று நினைந்து அவன் பூரண திருப்தி அடையலாம்'' — என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இறைவனின் பெருங்கருணையைப் பல பாடல்களில் வியந்து கூறும் திருவாசகம், இறைவன் எத்தகையவன் என்று கூறும்போது —

''அது பழச் சுவையென-
அமுதென அறிதற்கு
அரிதென எளிதென-
அமரரும் அறியார்''

என்று கூறுகின்றது.

பிரமமானது பழத்தின் சுவை போன்றது எனவும் அமுதம் போன்றது எனவும் அது அறிதற்கு முடியாதது எனவும் அறிதற்கு எளிதானது எனவும் தேவர்களும் அறியார். மனம் வாக்குக்கு எட்டாத இறைவன், அமரராலும் அறியப்படாத இறைவன், அன்பர்களிடத்துக் கொண்ட பெருங்கருணை காரணமாகத் திருப்பெருந்துறையிலே அன்பர்களுக்குக் காட்சி கொடுக்கின்றான். அமரராலும் அறிந்து கொள்ள இயலாத இறைவன் இவ்வுலகில் அன்பர்களுக்காக எளிதில் வந்து காட்சி கொடுப்பதை விளக்குந் திருவாசகப் பாடல்:

''அதுபழச் சுவையென-
அமுதென அறிதற்கு
அரிதென எளிதென -
அமரரும் அறியார்
இது அவன் திருவுரு -
இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு-
இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில் திரு-
உத்தர கோச
மங்கையுள்ளாய் -
திருப்பெருந்துறை மன்னா
எது எமைப்பணி கொளும் -

**செல்வி பா.பாரதி**

ஆறாது கேட்போம்
எம் பெருமான் பள்ளி -
எழுந்தருளாயே.''

— என்று கூறுகின்றது.

எங்கும் நிறைந்த இறைவனை தயிரில் நெய் போலக் கண்டு வழிபடக் கூடிய இடம் ஆலயம். ஆலயத் திருமேனிகளில் இறைவனைக் கண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளுடனான சமாதான பேச்சு குறித்து அரசு என்னுடன் கலந்தாலோசிக்கவில்லை

## 'ராவய' பத்திரிகைக்கு அமைச்சர் தொண்டா பேட்டி

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் தொண்டமான் ''ராவய'' சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது:

கேள்வி; சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தொண்டா: சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதால் அது பற்றிய அபிப்பிராயத்தைக் கூறுவது பொருத்தமான ஒன்றல்ல. எவ்வாறாயினும் அரசாங்கம் முழு முயற்சியுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்கிறது எனக் கூற முடியும்.

கேள்வி: இதுவரை நடந்து முடிந்த பேச்சுக்கள் பற்றிய தங்கள் கருத்து என்ன?

தொண்டா: விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை மேற்கொண்டு வரும் வேளையில் நல்லெண்ணச் சமிக்ஞையாக சில பொலிசாரையும் மீனவர்களையும் விடுதலை செய்துள்ளனர். அதே போலவே மோதல் தவிர்ப்பும் தொடர்ந்து பேணப்படுகிறது இதிலிருந்து அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒரே நோக்கில் பிரச்சினையை நோக்குகினறனர் என்பது தெரிகிறது.

கேள்வி: இருப்பினும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் மீறியுள்ளனர் எனக் கூறப்படுகிறதே?

தொண்டா: எந்த ஒரு பிரச்சினைக்கும் எந்தவிதத் தீர்வு காணப்படினும் அத்தீர்வை ஏற்றுக் கொள்ளாதவர்கள் உள்ளனர். சமாதானத்தை விரும்பாதவர்கள்தான் இவ்வாறு கூறித்திரிகின்றனர். சிலர் பொறாமை காரணமாக இவ்வாறு கூறுகின்றனர். இவற்றிற்குக் காரணம் என்ன? அவர்களால் மேற்கொள்ள முடியாதனவற்றை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருவதேயாகும்.

கேள்வி; இவ்வாறான பிரசாரங்களின் பின்னணியில் ஐ. தே. கட்சி உள்ளது என்பது உங்கள் கருத்தா?

தொண்டா: நான் அவ்வாறு கூறவில்லை. நான் ஐ. தே. கட்சியில் இருந்தபோதும் விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதை அவர்கள் எதிர்க்கவில்லை அமைச்சர் காமினி ஜயசூரியா போன்ற சில அமைச்சர்களே எதிர்த்தனர். அதே போல சில செய்திப் பத்திரிகைகளும் எதிர்த்தன.

சொந்த முறையில் வேறான கொள்கை நாங்கள் கொண்டிருக்கலாம். உண்மையில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோர் மாத்திரமே உண்மையான கருத்தைக் கொண்டிருக்க முடியும். முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய விடயங்களைத் தீர்மானிப்பவர்களும் அவர்களே.

கேள்வி; உங்களுடன் பொ. ஐ. முன்னணி அரசு சமாதானப் பேச்சுக்கள் குறித்து கலந்தாலோசித்ததா?

பதில்:- இன்றுவரை அரசு கலந்தாலோசிக்கவில்லை. தேவையெனக் கருதப்படுமிடத்து எனது அபிப்பிராயங்கள் கோரப்படலாம்.

கேள்வி:- விடுதலைப் புலிகள் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை விரும்புகிறார்களா?

தொண்டா:- அப்படித்தான் பேசப்படுகிறது. ஆனால் அது உண்மையா. இல்லையா என்பதை என்னால் கூறமுடியாதுள்ளது.

கேள்வி: இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக நீங்கள் இதுவரை முன்வைத்த திட்டங்கள் எவை?

தொண்டா: முதலில்தனிப்பட்ட முறையில் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தேன். அதில் வடக்கு-கிழக்கு வாழ் மக்களுக்கு அதிகபட்ச உரிமைகள் வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தேன். தனிநாடு ஒன்றைக் கோருபவர்களுக்கு தனிநாடொன்றை வழங்குவகற்குப் பதிலாக அதிகபட்ச உரிமைகளை வழங்குதல் என்ற நோக்கிலேயே அவ்வாறு கூறப்பட்டது சுருங்கக்கூறின் கொழும்பில் உள்ள நிலைபோன்ற ஒன்றை வடக்கில் உருவாக்குதலேயாகும்.

அதன் மூலம் அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான தூண்டுதல்களை அவர்களிடமே வழங்குதல் வேண்டும். பலர் இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வரும் போது முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்து கேள்விகளை எழுப்புகின்றனர் இவ்வாறான எண்ணங்களின் அடிப்படையிலேயே அஷ்ரப் - தொண்டமான் திட்டம் உருவாக்கப்பட்டது அந்தத் திட்டத்திற்கூட வடக்கும் கிழக்கும் ஒன்றிணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தினரைப் பாதிக்கும் பிரச்சினைகள் [illegible] போது அது [illegible] பெரும்பான்மை [illegible] மதிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஆட்சி அதிகாரத்தில் முதலமைச்சர் பதவி தமிழர் ஒருவருக்கும் பிரதி முதலமைச்சர் பதவி முஸ்லிம் ஒருவருக்கும் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. எனவே வடக்கும் கிழக்கும் இணைக்கப்படும்போது பிரச்சினைகள் எவையும் தோன்றமாட்டா.

கேள்வி: இந்த அடிப்படையில் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதற்கு அஷ்ரப் இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் கூறுகிறீர்களா?

தொண்டா: ஆம்

கேள்வி: 1977ஆம் ஆண்டிலிருந்து அமைச்சரவைகளில் நீங்கள் அங்கம் வகித்து வருகிறீர்கள். நீங்கள் அங்கம் வகித்த அமைச்சரவையில் சிறந்தது என எதை குறிப்பிடுகிறீர்கள்?

> எல்லா விடயங்களிலும் நல்லதும் கெட்டதும் உண்டு. இவற்றை தராசில் நிறுத்துப் பார்த்துத் தீர்மானிக்க முடியாது, ஆனால ஒரு அமைச்சரவை எப்படிப்பட்டதென்பதை பொது தேர்தலில் மக்கள் அளிக்கும் தீர்ப்பின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

தொண்டா: எந்த அமைச்சரவை சிறந்தது என என்னாலோ அல்லது வேறு அமைச்சர்களாலோ தீர்மானிக்க முடியாது. எல்லாவிடயங்களிலும் நல்லதும் கெட்டதும் உண்டு. இவற்றைத் தராசில் நிறுத்துப் பார்த்துத் தீர்மானிக்க முடியாது ஆனால் ஒரு அமைச்சரவை எப்படிப்பட்டது என்பதை பொதுத் தேர்தலில் மக்கள் அளிக்கும் தீர்ப்பின் மூலம் அறிந்து கொள்ளலாம்

கேள்வி ஜே. ஆர்., பிரேமதாசா, விஜேதுங்க, சந்திரிகா ஆகியோர் குறித்து தங்கள் கருத்தென்ன?

பதில்: ஜே ஆர் அனுபவசாலி என்ற காரணத்தினால் அவர் எடுக்கும் தீர்மானங்கள் குறித்து ஏனையோருடன் கலந்துரையாடினார். ஆனால் பிரேமதாசாவோ இதற்கு முற்றிலும் மாறுபட்டவர். அவர் தன்னிச்சையாகச் செயற்பட்டார். தங் [illegible] பட்டவில்லை என அவரது [illegible] வகித்த சில அமைச்சர்கள் கூட விரக்தியடைந்திருந்தனர். தனிநபர் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அவர் வேகத்துடன் செயற்பட்ட ஒருவராவார். அவ்வாறான அனுபவம் வாய்ந்த ஒருவரை எதிர்த்து நின்று முன்னணிக்கு வந்தவர் சந்திரிகா. சந்திரிகா பற்றி இதுவரை எதுவித [illegible] உருவாக்க முடியவில்லை. காரணம் அவர் ஆட்சிக்கு வந்து ஒரு சில மாதங்கள் மட்டுமே ஆகும்.

முன்னர் பதவியிலிருந்த ஏனைய தலைவர்களிலும் பார்க்க சந்திரிகாவிற்கு சமாதான விடயத்தில் தைரியமும் துணிவும் உள்ளன. ஆனால் தலைமைத்துவத்தை அதன் மூலம் மாத்திரம் மதிப்பிட முடியாது.

கேள்வி: விஜேதுங்கா பற்றி நீங்கள் எதுவும் கூறவில்லையே.

அவர் பற்றி எதுவித கருத்தையும் தெரிவிக்காமல் இருப்பதே நல்லது.

தொண்டா:- எயர் லங்கா-எயர் பஸ் விடயங்கள் தொடர்பாக தங்கள் மீதும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் உண்டல்லவா?

பதில்:- நான் அவை பற்றி அறியேன் ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவிடம் பத்திரிகைச் செய்தியாளர் ஒருவர் இதுபற்றி கேள்வியொன்றை எழுப்பினார் குற்றங்கள் இருப்பின் விசாரிக்கப்படும் என ஜனாதிபதி பதிலளித்தார். அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவை நிருபிக்கப்பட வேண்டும். மேலும் இவை பற்றி இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது இருப்பதிலிருந்து அவ்வாறான குற்றச்சாட்டுகள் எவையுமில்லை என்பது தெளிவாகிறது

கேள்வி:- தங்களை இந்திய அரசின் அடிமை எனக் கூறுகிறார்களே.

தொண்டா:- இந்திய அரசின் நண்பனாயிருப்பதில் தவறில்லை என நான் நினைக்கிறேன். எமது கலாசாரம், எமது மதம் ஆகியனவற்றை நோக்கும்போது நாம் இந்தியாவிற்குக் கடன்பட்டவர்களே.

கேள்வி.- இந்தியப் புலனாய்வுத் துறையினருக்கும் (Raw) தங்களுக்கும் தொடர்புகள் உண்டா?

தொண்டா:- எனக்கு அவர்களுடன் எதுவிதத் தொடர்பும் இல்லை. அவர்களுக்கு என்னுடன் தொடர்புகள் உண்டா என்பதை நான் அறியேன். எவராவது நான் இந்திய புலனாய்வுத் துறையுடன் தொடர்பு கொண்டுள்ளேன் எனக் கூறுவார்களேயாயின் அவர்களுக்கு ஏக்கனவே இந்தியப் புலனாய்வுத் துறையுடன் தொடர்புகள் இருந்திருக்க வேண்டும்.

கேள்வி:- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தவர்களைப் பொறுத்தவரையில் நீங்கள் மாத்திரமே அரச தரப்பில் அமர்ந்திருக்கிறீர்கள். ஏன்?

தொண்டா:- இன்னும் எதிர்க்கட்சி என்ற அளவிலேயே உள்ளோம். இருப்பினும், இ. தொ. காங்கிரஸின் முடிவின்படியே நான் அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளேன். ஏனையோரும் இ. தொ கா. அங்கத்தவர்கள் என்ற நிலையிலேயே நாடாளுமன்றத்தில் உள்ளனர். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிப்பர் எவ்வாறாயினும் இ. தொ. காங்கிரஸின் தலைமைத்துவம் அரசுடனேயே உள்ளது. இ. தொ. கா எவ்வாறு செயற்படுகிறது என்பதை அறியாத சிலருக்கு இவ்வாறான நிலைமை பற்றி சிந்திக்க முடியாது.

கேள்வி;- ஏனைய இ.தொ. கா. அங்கத்தவர்களையும் அரசுடன் சேர்க்காமல் இருப்பது தேவை ஏற்படின் அவர்களை அரசுக்கு எதிராகச் செயற்பட வைப்பதற்காகவா?

தொண்டா:- அந்த உரிமை எங்களுக்கு இருக்க வேண்டும்.

கேள்வி:- பொ. ஐ. மு. அரசின் அங்கத்தவரான பின்னரும் உங்களுக்கு எதிராக ஐ. தே. க. இன்னும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

தொண்டா:- நடவடிக்கை எடுக்கக் கூடிய ஆற்றல் அவர்களிடமில்லை. இ. தொ. காங்கிரஸிற்கும் ஐ. தே. கட்சிக்கும் தேர்தல் உடன்படிக்கை ஒன்று உள்ளது. நாங்கள் இதுவரை உடன்படிக்கையை மீறவில்லை ஏதாவது காரணத்தினால் ஐ. தே. கட்சி எம் மீது நடவடிக்கை எடுப்பின் அவர்களது பண்புகள் விகாரமடையலாம்.

கேள்வி:- திரு. செல்லச்சாமி பற்றி என்ன கூறுகிறீர்கள்?

தொண்டா:- எவராயிருப்பினும் சரி அவர் அனுசரிக்கும் வழிமுறைகளைப் பொறுத்தே உயர்வடைய முடியும் இதுவே ஜனநாயகம். அவர் அந்த நிலைமைக்கு முதுகுகாட்டியதால் அவராகவே அந்த உரிமையை இல்லாமற் செய்துள்ளார். கட்சிக்குத் துரோகம் செய்ததால் தூக்கி வீசப்பட்டார். அவர்களுக்கு சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு செயற்படத் தெரியவில்லை.

கேள்வி:- திரு. சந்திரசேகரன் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

தொண்டா:. நானே அவரை முதன் முதலில் இ. தொ. கா.வில் சேர்த்து தொழிற் சங்கத் தலைமைப் பயிற்சியை அளித்தேன். செல்லச்சாமி பின்னர் அவருக்கு எதிரியானதுடன் அவரை கட்சியிலிருந்து வெளியேற்றவும் காரணமாயிருந்தார். எவ்வாறாயினும் கடந்த பொதுத்தேர்தலைப் பொறுத்தவரை சந்திரசேகரன் ஓர் அதிஷ்டசாலியாவார். பின்வரும் காரணத்தினாலேயே நான் அவ்வாறு கூறுகிறேன். கடந்த பொதுத் தேர்தலின் போது நுவரேலியா மாவட்டத்தில் ஐ.தே.க வேட்பாளருக்கு 37,000 வாக்குகளும் பொ. ஐ. முன்னணி வேட்பாளர் ஆனந்த தசநாயக்காவிற்கு 27,000 வாக்குகள் கிடைத்தும் அவர்களால் நாடாளுமன்ற அங்கத்தவர்களாக தெரிவாக முடியவில்லை. ஆனால் 23 000 வாக்குகளைப் பெற்ற சந்திரசேகரன் நாடாளுமன்ற அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கேள்வி:- தாங்கள் தனிப்பட்ட அரசியலில் இரண்டு பக்கமும் விளையாடுவதாகப் பலர் கூறுகிறார்களே.

தொண்டா:- எவர் எவ்வாறு கருதினும் எனக்கொன்றும் இல்லை எனது மக்களுக்கு உதவி செய்வது என்ற காரணத்திற்காக நான் எந்த வித தடைகளையும் தாண்டி முன்னேறுவேன். இக்காரணத்தினால் சிலர் பல்வேறு விதத்தில் என்னை அழைக்கக் கூடும். எனது கொள்கைகள் யாருக்காகவேனும் மாற்றப்பட வேண்டியவை அல்ல.

கேள்வி:- நீங்கள் உங்களது மக்கள் குறித்துப் பேசிவந்த போதிலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் மலைநாட்டுத் தமிழர்கள் குறித்து உங்களுக்கு அக்கறை இல்லையே

தொண்டா:- அவர்கள் எனது தலைமையில் நம்பிக்கையை இழந்து தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்குச் சென்று குடியேறியுள்ளனர். மலைநாட்டில் எனது தலைமைத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள மக்களுக்காக மாத்திரமே என்னால் சேவை செய்ய முடியும். என் மீது நம்பிக்கை இல்லையெனில் நான் என்ன செய்வது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு வேலாயுதம்

சண்டிலிப்பாய், மகா வித்தியாலயத்தடியைச் சேர்ந்த திரு. கார்த்திகேசு வேலாயுதம் 08-02-95 இல் காலமானார். இவர் இராஜமலரின் அன்புக் கணவரும், சந்திராதேவி, இந்திராணி, சிவபாலன் (மேற்பார்வையாளர், இலங்கை வங்கி தலைமை அலுவலகம், கொழும்பு), சிவகுமாரன் (ஆசிரிய ஆலோசகர், சண்டிலிப்பாய் கோட்டம்), சித்திராதேவி, சிவசத்திவேல் (ஆசிரியர், நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குணசீலன் (சேவ் கிளாஸ் வேக்ஸ், நீர்வேலி), இராஜரட்ணம் [இ. போ. ச.], நிர்மலா, திலகவதி ஆகியோரின் அன்பு மாமனாரும்,யசோதா, ந்தீஸ், யமுனா, சிந்துஜா, பிரசாத் மிதுலன், நிஷாந், வசந் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் 09-02-95 அன்று நடைபெற்றன.

தகவல்:
வே. சிவபாலன்.
(மகன்)

மகா வித்தியாலயத்தடி,
சண்டிலிப்பாய். [35122]

## திருமதி செல்லையா அன்னலட்சுமி

நல்லூரைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி அன்னலட்சுமி 09—02—1995 இல் சிவபதமடைந்துள்ளார். இவர் அமரர் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் திரு. சுப்பிரமணியம் (முன்னைநாள் இ. போ. ச சாரதிப் பயிற்சி ஆசிரியர், தற்பொழுது பிரான்ஸ்) சிவராசா (சவூதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி இரத்தினம், திருமதி பாலசரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியாரும், தவசீலன் [பிரான்ஸ்], ஜெயசீலன் (பிரான்ஸ்), பிரபா[பிரான்ஸ்] சத்தியா (இராமநாதன், நுண்கலைத்துறை) தனப்பிரியா, சிவகுமார் [பிரான்ஸ்), திருமதி பாலறஜனி (இத்தாலி), பாலராணி (இத்தாலி, பாமினி (இத்தாலி] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை 09 - 02 - 1995 அன்று நடைபெற்றன இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி சுப்பிரமணியம்.
(மருமகள்)

167/2, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (35121)

## திருமதி முத்துத்தம்பி சின்னத்தங்கச்சி

[கந்தரோடை]

கந்தரோடையைச் சேர்ந்த திருமதி முத்துத்தம்பி சின்னத்தங்கச்சி நேற்று 9-2-95 வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், ஞானதேவி, பாஸ்கரதேவன் [Retired Principal], கெங்காதேவி, காலஞ்சென்ற சுகாதாரப் பரிசோதகர் கருணானந்தன், சீதாதேவி (U.K), ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேந்திரம் (J.P.MBE), இரதிமலர், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை, வசந்காதேவி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், குலசிங்கம் (Riyadh) ஆகியோரின் அன்பு மாமியாரும் கந்தசாமியின் (வட்டுக்கோட்டை) அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10-2-95) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி. ஜெயதேவி குலசிங்கம்
[மகள்]

கந்தரோடை,
சுன்னாகம். [7896]

## வீரவாகு ஐயாத்துரை

[முன்னாள் இ. போ. சபை நேரக்கணிப்பாளர்]

கட்டப்பிராய் கலைமணி வீதியைச் சேர்ந்த வீரவாகு ஐயாத்துரை நேற்றுக் காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வீரவாகு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சண்முகானந்தன் [முன்னாள் இ போ.சபை வன்னி மாவட்ட பிரதேச முகாமையாளர் - கனடா], திருமதி இலட்சுமிகாந்தன் தங்கமணி, பரமானந்தம், ஈஸ்வரானந்தம் [கனடா], நவநீதராஜா [ஜேர்மனி], ஸ்ரீகாந்தன் [சுவிஸ்], ரவீந்திரகுமார் [டென்மார்க்], ஜெயராஜா [டென்மார்க்] ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி செல்வேந்திரகுமாரி [கனடா], இலட்சுமிகாந்தன் [கிராம அலுவலர், J 94 அரியாலை மத்தி வடக்கு], திருமதி ஸ்ரீதயா, திருமதி ரஞ்சி [கனடா], திருமதி ஜெயசோதி [ஜேர்மனி], திருமதி யோகா [சுவிஸ்], திருமதி நளினி [டென்மார்க்], திருமதி நளாயினி [டென்மார்க்] ஆகியோரின் அன்பு மாமனாரும், நவரத்தினத்தின் [கனடா] மைத்துனரும், சுதாகரன், பகிரதன், சுதர்சினி, தாட்சாயனி, கௌசிகா, ஜெர்சன், ரஜீவன் [கனடா], சுரேந்திரன் [யா/இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்], அமிழ்தினி [யாழ் வேம்படி O/L வகுப்பு மாணவி], கார்த்திகா [யா/ இந்துமகளிர் கல்லூரி ஆண்டு - 8], நிவேதிதா [லண்டன்], வைதேகி [கொ/ இந்துக்கல்லூரி ஆண்டு- 10], கௌதமி [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], ஸ்ரீராம் [யா/ திருநெல்வேலி சைவத்தமிழ வித்தியாசாலை], ஜென்சிகா [ஜேர்மனி], சிந்துஜா, சுபாங்கி, இலக்கியா [டென்மார்க்], ஜெனகன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (10-02-1995) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

கலைமணி வீதி,
கட்டப்பிராய். [35137]

# தீர்வு ஒன்றுக்கு வருமாறு புலிகளை அமெரிக்கா நெருக்க வேண்டும்

## லக்ஷ்மன் கதிர்காமர் கோரிக்கை

கொழும்பு, பெப். 10

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஒத்துழைக்குமாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தூண்டுமாறு வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவை வலியுறுத்தி கேட்டுள்ளார்.

வாஷிங்டனில் தேசிய பத்திரிகையாளர் கழகத்தில் செவ்வாயன்று உரையாற்றிய போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

'குறைந்த பட்சம் ஆதரவான அறிக்கை ஒன்றை — அதாவது இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சு நடத்துவதை உற்சாகப்படுத்தும் வகையிலான அறிக்கையை நாம் எதிர்பார்க்கிறோம்— என்றார் அவர். [இ-3]

## அமிர் கொலை வழக்கு எதிரி விடுதலை

கொழும்பு, பெப். 10

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் அ. அமிர்தலிங்கம் கொலை வழக்கில் 7 வருட கடூழியச் சிறைத்தண்டனை பெற்றவர் விடுதலையானார்.

இந்த வழக்கை விசாரணை செய்த கொழும்பு உயர் நீதிமன்றம் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வின்சண்ட் வில்லியம் மரியதாஸ் என்பவருக்கு 7 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்திருந்தது.

இவ்வழக்கை விசாரித்த அபீல் நீதிமன்றம் இவரை விடுதலை செய்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது. (இ 3)

## பெற்றோல் - டீசல் தடை நீக்க புலிகள் கோரிக்கை

கொழும்பு, பெப். 10

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் மீது தொடர்ந்து விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அரசு — விடுதலைப் புலிகள் நடத்தி வரும் சமாதானப் பேச்சுக்களின் நான்காவது கட்டம் விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேச்சுவார்த்தைக்கான திகதியை அரசாங்கமே நிர்ணயித்து விடுதலைப் புலிகளுக்குச் சிபார்சு செய்ய இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது (அ)

## தேசிய கல்வி கொள்கை திட்டம் வெளிவரும்

கொழும்பு, பெப். 10

புதிய தேசிய கல்விக் கொள்கைத் திட்டம் இன்று வெளியிடப்படும்.

கல்வித்துறையில் பலமாற்றங்களை கொண்டுவரும் முகமாக தேசிய கல்வி ஆணைக்குழு இதனை வகுத்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயத்திலக புதிய கல்வி கொள்கை அறிக்கையினை கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரனவிடம் இன்று கையளிப்பார்.

## கராஜ் உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 10

மோட்டார் ஊர்திகள் திருத்தும் கராஜ் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறும்.

இதில் கராஜ் உரிமையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுள்ளனர். [இ-4]

## கலைப்பீட---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரை வினவியபோது மாட்டு வண்டி எரித்தது அனைத்து மாணவர்களுமே! இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளவருக்கும் இந்த எரிப்புச் சம்பவத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றனர்.

(இ-4-14)

## இனப்பிரச்சினை தீர்வுக்கான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கவில்லை

### பூநகரி

பூநகரி முகாமை அகற்றுமாறு விடுக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை நாம் நிராகரித்துள்ளோம்

தமிழ் மக்களுக்கு சமாதானம் அவசியமாக உள்ளதென்பதே வடபகுதியில் உள்ள அரசியல்யதார்த்த நிலைமை.

### புனரமைப்பு

யுத்தத்தால் சேதமாக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைப் புனரமைக்கும் பணி அடுத்த இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படும்.

அரச பொறியியலாளர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் அடுத்த இரண்டு வாரங்களில் யாழ் மாவட்டத்துக்குச் சென்று யுத்தத்தால் சேதம் அடைந்த ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், நெடுஞ்சாலைகள், மின்சார அமைப்புகள் ஆகியவற்றைப் புனரமைக்கும் பணியை ஆரம்பிப்பார்கள்.

புனரமைப்புப் பணிக்குத் தேவையான உபகரணங்களை எடுத்துச்செல்ல வீதிகள் திறக்கப்படவேண்டும். இல்லையேல் அவை கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும்.

கடந்த ஆகஸ்ட் மாத நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தோம் அவர்கள் புனரமைப்பு வேலைகளுக்கு இணக்கத்தை தெரிவித்திருக்கின்றனர்

### தேர்தல்

இவ்வருட மத்தியில் இடம்பெறவுள்ள அரசமைப்பு மாற்றத்துடன் நாட்டில் புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் பெருமளவு வாய்ப்பு இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசமைப்பு மாற்றங்களைச் செய்து இப்போதுள்ள நிலையிலேயே நாடாளுமன்ற முறைக்கு நாங்கள் பிரவேசிப்பின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஒரேயொரு ஆசனப் பெரும்பான்மையே இருக்கும். அந்நிலைமை மக்கள் கருத்துக்கு முரண்பாடானது ஆதலால் புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டும்.

கடந்த நவம்பரில் மக்கள் வழங்கிய ஆணை அதே வகையில் நிலவவேண்டுமாயின்' புதிய தேர்தல் ஒன்றோ அல்லது அதற்குச் சமானமான பிறதொரு நடவடிக்கையோ அவசியமாகும்.

### மோதல் தவிர்ப்பு

சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாகவும் திருப்தியாகவும் இருக்கின்றன. எனினும் அம்முயற்சிகள் குறித்து அபரிமிதமாகக் கூறுவதற்கு இல்லை.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்தவிர்ப்பு நல்ல முறையில் அமுல்படுத்தப்படுகிறது.

### 4 ஆம் கட்ட பேச்சு

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த (நான்காம்) கட்ட பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்படுமென்றும் இனத்தகராற்றை தீர்த்து வைப்பதற்கான அரசியல் விவகாரங்கள் பற்றி கலந்துரையாடுவதில் அரசாங்கம் அக்கறையுடன் இருக்கிறது.

மோதல் தவிர்ப்பிற்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் எதிர்ப்பாக இருந்தார்களென வெளிவந்த செய்திகள் தவறாகும்' இராணுவத்தினரின் பூரண ஒத்துழைப்பு அரசுக்கு உண்டு.

நாட்டின் கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினர் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் மேலும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

(அ-க-4-7)

## தமிழீழ---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அட்டை'' விசேட கவனத்தில் கொள்ளப்படும்.

எனவே வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் தங்களுடைய தகைமைக்கேற்றவாறு தொழில் வாய்ப்புக்களை பெறும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கு தமிழீழ நிர்வாக சேவையின் மானிட மூலவள அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் தொழில் வங்கியில் வேலையற்றோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது

தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கு பாடசாலை விடுகைப் பத்திரம், பிறப்புத் தாட்சிப் பத்திரம் கல்வித் தகைமைக்கான சான்றிதழ், தொழில் பயிற்சிச் சான்றிதழ் குடும்ப பதிவு அட்டை, வேலையற்றிருப்பதை உறுதிப்படுத்திய சான்றிதழ், வேறு விசேட ஆவணங்கள் தேவைப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## கண்காணிப்புக்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது—

விடுதலைப் புலிகள் தலைவர்களுடன மட்டுமன்றி தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடனும் பேச்சு நடத்தியதும் தெரிந்ததே.

மொத்தம் ஆறு கண்காணிப்புக் குழுக்கள் இயங்க வேண்டியதன் அவசியம் விடுதலைப் புலிகள் தரப்பினால் வலியுறுத்தப்பட்டது.

கொழும்பு திரும்பிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கடந்த திங்கட்கிழமை பிற்பகலில் ஜனாதிபதியின் செயலாளர் திரு. கும்சிறி பாலபட்டபெண்டியைச் சந்தித்து விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சு விபரத்தைத் தெரிவித்தனர்

அதனைத் தொடர்ந்து கண்காணிப்புக் குழுக்களின் எண்ணிக்கையை ஆறாக அதிகரிப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகவும் —

புதிய குழுக்களுக்குத் தலைமை வகிக்க மேலும் இரண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அழைக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## தயிரல்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவன் பெருங் கருணையை நினைத்து ''இது அவன் திருவுரு இவன் அவன்என'' வழிபட்டு உய்தி பெற வேண்டியது நம்கடன்.

இறைவனின் பெருங் கருணையைப் பெற ஆலயம் தொழுவது சாலவும் நன்று

## "சீ-டான்ஸர்"...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசக் குழு இணக்கம் தெரிவித்துள்ளதாக யாழ் பிரதம தபாலதிபர் திரு சு கோடீஸ்வரன் தெரிவித்தார்.

திருமலைக்கு எடுத்துச் செல்லப்படும் தபால் பொதிகளை அன்றைய தினமே அங்கிருந்து தரைமார்க்கமாக கொழும்புக்கு கொண்டு செல்லவும் ஏற்பாடாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை — கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கான வெளியூர் தபால் பொதிகளை ''சீ — டான்ஸர்'' மூலம் இங்கு எடுத்துவர முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-5)

# மரண அறிவித்தல்

## தம்பையா பாலசிங்கம்

[ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்]

சங்குவேலியை பிறப்பிடமாகவும் நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாக கொண்டவருமாகிய தம்பையா பாலசிங்கம் 06-02 95 திங்கள் கொழும்பில் காலமானார்.

இவரது ஈமச்சடங்கு 08 02 95 புதன்கிழமை அன்று கொழும்பில் நடைபெற்றன அன்னாரது துக்கதினம் இன்று 10-02-95 வெள்ளிக்கிழமை நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள இல 20 ஆகிய அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சு. சிவானந்தராசா

(35134)

# திரு இருதய ஆண்டவர் ஆலய 6 ஆவது ஆண்டு விழா

யாழ். மடம் வீதியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தின் 6ஆவது ஆண்டு நிறைவுப் பெருவிழா இன்று (10-02-1995) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறும்.

இந்த வழிபாட்டில் அனைத்துப் பக்தர்களையும் வந்து இருதய ஆண்டவர் ஆசிகளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய நிர்வாகம்.

(35138)

# போயிட்டி லூர்து அன்னை பெரு விழா

11 — 02 — 95 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் போயிட்டி பங்கு மக்கள் ஒன்று கூடி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரால் திருப்பலி நிறைவேற்றப்படும்

— பங்கு மக்கள் —

(35136)

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 21 — 04 — 1935

இறப்பு: 22 — 01 — 1994

## அமரர் பொன்னையா தங்கராசா

திதி: 10 — 02 — 1995

பாசத்தில் ஊற்றெடுத்த பாசமிகு தந்தையே! வானத்து சிறகுகள் உங்களை இருகரம் நீட்டி அழைத்ததேனோ? காலம் என்ற யமன் நேசத்தை வென்றதுவோ? ஓராண்டு என்ன, ஓராயிரம் சென்றாலும் நீங்காதப்பா உங்களின் நினைவுகள்.

அன்பின் மனைவி, பிள்ளைகள்,

41/49, செட்டியார் தோட்டம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (35129)

# கண்ணீர் அஞ்சலி

08- 02- 1995 இல் எதிர்பாராது இறையடி சேர்ந்த எமது பாடசாலை மாணவன்

## செல்வன் தேவராசா சங்கர்

அவர்களின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம். அவரின் பெற்றோர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
யாழ்ப்பாணம்,

(35135)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10 - 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org